
**செப்டம்பர் – 13**

# TNPSC துளிகள்

- மலேசியாவின் கோலாலம்பூரில் நடைபெற்ற சர்வதேச நீர்ப்பாசனம் மற்றும் வடிகால் ஆணையத்தின் (ICID) கூட்டத்தில், சிறந்த பாரம்பரிய நீர்ப்பாசனப் பணிகளைக் கட்டமைத்தல் மற்றும் பராமரித்தல் ஆகியவற்றிற்கான விருதுகளை தமிழ்நாட்டின் செய்யாறு மற்றும் கொடிவேரி அணைகள் வென்றுள்ளன.
- இந்திய இரயில்வே நிர்வாகம் ஆனது, சென்னையில் உள்ள ஒருங்கிணைந்த இரயில் பெட்டித் தொழிற்சாலையில் (ICF) ஹைட்ரஜன் எரிபொருளில் இயங்கும் இந்தியாவின் முதல் இரயில் பெட்டியை வெற்றிகரமாக சோதித்தது.
- பாலக்காட்டைச் சேர்ந்த வெளிநாடு வாழ் இந்தியர் (NRI) யூனுஸ் அகமது, தனது வணிகத் தலைமை மற்றும் பங்களிப்புகளுக்காக துபாயில் அரேபிய உலக சாதனைகள் அமைப்பிடமிருந்து 2025 ஆம் ஆண்டிற்கான கேமல் சர்வதேச விருதைப் பெற்றார்.
- தஜிகிஸ்தானில் உள்ள ஹிசோர் சென்ட்ரல் மைதானத்தில் நடைபெற்ற CAFA நாடுகள் கோப்பை 2025 போட்டியில் ஓமன் அணிக்கு எதிரான வரலாற்றுச் சிறப்புமிக்க அதன் முதல் வெற்றியின் மூலம் இந்தியா தனது வெண்கலப் பதக்கத்தை வென்றது.
- அமெரிக்கச் சதுரங்க வீரர் அபிமன்யு மிஸ்ரா FIDE கிராண்ட் சுவிஸ் 2025 போட்டியில் உலக சாம்பியன் D குகேஷை தோற்கடித்து வரலாறுப் படைத்தார்.
- இந்தியக் குடியரசுத் தலைவர், புது டெல்லியில் நடைபெற்ற இந்தியாவின் பொறியியல் ஏற்றுமதி ஊக்குவிப்பு சபையின் (EEPC) பிளாட்டினம் விழா கொண்டாட்டங்களில் பங்கேற்றார்.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## தோல் மற்றும் எலும்பு தானம் 2025




- கடந்த மூன்று ஆண்டுகளில் தமிழ்நாட்டில் தோல் மற்றும் எலும்பு தானம் படிப்படியாக அதிகரித்துள்ளது.
- தமிழ்நாடு உறுப்பு மாற்று ஆணையத்தின் (டிரான்ஸ்டன்) கூற்றுப்படி, 2022 ஆம் ஆண்டில் 16 தோல் தானம், 2023 ஆம் ஆண்டில் 23 மற்றும் 2024 ஆம் ஆண்டில் 77 என

மொத்தம் 100 தோல் தானம் செய்யப் பட்டுள்ளன.

- 2025 ஆம் ஆண்டின் நிலவரப்படி, இதுவரை 36 தோல் தானம் பதிவு செய்யப் பட்டுள்ளது.
- 2022 ஆம் ஆண்டில் 50, 2023 ஆம் ஆண்டில் 57 மற்றும் 2024 ஆம் ஆண்டில் 111 எலும்பு தானம் செய்யப் பட்டுள்ளன.
- 2025 ஆம் ஆண்டில் இதுவரை, 80 எலும்பு தானம் பதிவு செய்யப்பட்டுள்ளது.
- உயிரிழந்த உறுப்பு கொடையாளர்களின் மார்பு மற்றும் தொடைகளில் இருந்து தோல் பிரித்தெடுக்கப்பட்டு, மீட்டெடுக்கப்பட்ட பிறகு அது மிக முழுமையாக சுற்றப்பட்டு பாதுகாக்கப் படுகிறது.
- தானம் செய்யப்பட்ட தோல், தோல் வங்கிகளில் பாதுகாக்கப்படுகிறது என்பதோடு மேலும் அதனை ஐந்து ஆண்டுகள் வரை சேமிக்க முடியும்.
- சென்னையில் உள்ள அரசு கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி (KMC) மருத்துவ மனையில் முழு அளவிலாக இயங்கும் தோல் வங்கி உள்ளது.

## காவலர் தினம் 2025



- 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் 10 ஆம் தேதியன்று சென்னையில் நடைபெற்ற காவலர் தினக் கொண்டாட்டங்களில் தமிழக முதல்வர் பங்கேற்றார்.
- 2025–2026 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கைக் கூட்டத்தொடரின் போது, செப்டம்பர் 06 ஆம் தேதியன்று தமிழ்நாடு முழுவதும் ஒவ்வோர் ஆண்டும் காவலர் தினமாகக் கொண்டாடப்படும் என்று அவர் அறிவித்திருந்தார்.
- 1859 ஆம் ஆண்டு சென்னை மாவட்டக் காவலர் சட்டம் இயற்றப்பட்டதை காவலர் தினம் குறிக்கிறது.
- 1859 ஆம் ஆண்டு செப்டம்பர் 06 ஆம் தேதியன்று நடைமுறைக்கு வந்த இந்தச் சட்டமானது நவீன காவல் அமைப்பிற்கு அடித்தளத்தினை அமைத்தது.

## பாதுகாப்பிற்கான பழைய தமிழ் கையெழுத்துப் பிரதிகள்

- ஜெர்மனியின் கொலோன் பல்கலைக்கழகத்தின் பழைய கையெழுத்துப் பிரதிகளை சென்னை ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தின் (RMRL) அறங்காவலர்களிடம் தமிழக முதல்வர் ஒப்படைத்தார்.
- ஜெர்மனிக்கு அண்மையில் மேற்கொண்ட அதிகாரப்பூர்வப் பயணத்தின் போது

முதலமைச்சரிடம் இந்தக் கையெழுத்துப் பிரதிகள் வழங்கப்பட்டன.

❖ தமிழ்நாடு அரசானது, முன்னதாக 2021 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் கொலோன் பல்கலைக் கழகத்திற்கு 1.25 கோடி ரூபாயை வழங்கியது.



## தமிழ்நாட்டின் உள் இடஒதுக்கீடுக் கொள்கை

❖ 1996 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில், மு. கருணாநிதி தலைமையிலான திமுக அரசு கல்வித் தரங்களை மறுஆய்வு செய்வதற்காக ஓர் உயர் மட்டக் குழுவை அமைத்தது.

❖ இந்தக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், கிராமப்புறங்களில் உள்ள பஞ்சாயத்து பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்களுக்குத் தொழில்முறைப் படிப்புகளுக்கு 15% இடஒதுக்கீடு வழங்கும் அரசு ஆணை (G.O.) பிறப்பிக்கப்பட்டது.

❖ 1997 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில், 15% இட ஒதுக்கீடு மருத்துவப் படிப்புகளுக்கும் பின்னர் சட்டப் படிப்புகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டது.

❖ 2001 ஆம் ஆண்டில், ஜெ. ஜெயலலிதா தலைமையிலான அதிமுக அரசு கிராமப் புறங்களுக்கான ஒதுக்கீட்டை 15 சதவீதத்திலிருந்து 25% ஆக உயர்த்தியது.

❖ 2002 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில், சென்னை உயர்நீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வானது, இந்திய அரசியலமைப்பின் 14வது சரத்தின் கீழ் இந்த அரசாணையை அரசியலமைப்பிற்கு விரோதமானது என்று ரத்து செய்தது.

❖ தமிழக அரசானது, உயர்நீதிமன்ற உத்தரவை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் சிறப்பு அனுமதி மனு (SLP) தாக்கல் செய்தது.

❖ உள் இடஒதுக்கீடு ஆனது கிராமப்புற மாணவர்களுக்கு ஆதரவளிப்பதை நோக்கமாகக் கொண்டது என்றும், மேலும் அது சமூக மற்றும் கல்வியில் பின்தங்கிய நிலையை அடிப்படையாகக் கொண்டது என்றும் SLP வாதிட்டது.

❖ சென்னை உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை நிறுத்தி வைக்க உச்ச நீதிமன்றம் மறுத்து விட்டது.

❖ இதன் விளைவாக, 25% கிராமப்புற இடஒதுக்கீடு கொள்கை நிறுத்தப் பட்டது.

❖ 2020 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில், எடப்பாடி K. பழனிசாமி தலைமையிலான அதிமுக அரசு, NEET தேர்வு அடிப்படையிலான மருத்துவ சேர்க்கையில் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 7.5% உள் இடஒதுக்கீடுக்கான மசோதாவை நிறைவேற்றியது.

❖ இந்தக் கொள்கையானது ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி P. கலையரசன் தலைமையிலான ஆணையத்தின் பரிந்துரைகளின் அடிப்படையில் அமைந்தது.

❖ இந்த ஆணையம் 10% இடஒதுக்கீட்டை பரிந்துரைத்தது, ஆனால் அரசாங்கம் 7.5% ஒதுக்கீட்டினையே செயல்படுத்தியது.

❖ 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில், மு.க. ஸ்டாலின் தலைமையிலான திமுக அரசு

பொறியியல், வேளாண்மை, கால்நடை மருத்துவம் மற்றும் மீன்வளப் படிப்புகளுக்கு 7.5% இடஒதுக்கீட்டை விரிவுப்படுத்தியது.

- ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி D. முருகேசன் தலைமையிலான மற்றொரு ஆணையத்தின் பரிந்துரைகளின் அடிப்படையில் இந்த விரிவாக்கம் செய்யப்பட்டது.
- இந்தக் கொள்கையானது, தற்போதுள்ள 69% வெளி இடஒதுக்கீட்டைப் பாதிக்காமல், சமூக ரீதியாகவும் கல்வி ரீதியாகவும் பின்தங்கிய நிலையில் உள்ள ஒரு புதிய அளவுருவினை அறிமுகப்படுத்தியது.
- இந்தக் கொள்கையின் கீழ், அரசுப் பள்ளி மாணவர்கள் BC, MBC, SC, ST மற்றும் OC உள்ளிட்ட அனைத்து வெளிப் பிரிவுகளிலும் முன்னுரிமை சேர்க்கையைப் பெறுகிறார்கள்.
- 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில், சென்னை உயர் நீதிமன்றம் 7.5% உள் இட ஒதுக்கீட்டின் அரசியலமைப்புச் செல்லுபடித் தன்மையினை உறுதி செய்தது.

| | | |
|---|---|---|
| 1 | Backward Classes | 26.5 % |
| 2 | Backward Class Muslims | 3.5 % |
| 3 | Most Backward Classes / Denotified Communities | 20 % |
| 4 | Scheduled Castes | 18 % |
| 5 | Scheduled Tribes | 1 % |
| | **TOTAL** | **69 %** |

## தமிழ்நாடு எழுச்சி உச்சி மாநாடு - ஒசூர்

- இரண்டாவது தமிழ்நாடு எழுச்சி உச்சி மாநாடு ஆனது 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் ஒசூரில் நடைபெற்று வருகிறது.
- இந்த உச்சி மாநாட்டில் 90க்கும் மேற்பட்ட முதலீட்டு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப் பட்டன.
- ஒசூர் ஆனது சென்னை-பெங்களூரு தொழில்துறை வழித்தடத்தின் ஒரு பகுதியாகும் என்பதோடு மேலும் ஆட்டோ (வாகனங்கள்), மின்சார வாகனம், மின்னணுவியல் மற்றும் துல்லியப் பொறியியலில் வலுவான சூழல் அமைப்பைக் கொண்டுள்ளது.
- ஒப்புதல் நடவடிக்கையின் கீழ் உள்ள முன்மொழியப்பட்ட ஒசூர் சர்வதேச விமான நிலையமானது, ஆண்டுதோறும் 30 மில்லியன் பயணிகளைக் கையாளும் என்று எதிர் பார்க்கப் படுகிறது.
- சென்னையில் உள்ள பழைய மகாபலிபுரம் சாலையை (OMR) மாதிரியாகக் கொண்டு ஒரு ஒசூர் கல்வி சார் நிறுவனங்கள் வழித்தடம் திட்டமிடப்பட்டுள்ளது.
- இந்த வழித்தடமானது, உலகளாவிய திறன் மையங்கள் (GCCs) மற்றும் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு (R&D) மையங்களை ஈர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2025–26 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு நிதி நிலை ஒதுக்கீடு அறிக்கையில் உலகத் தரம் வாய்ந்த உள்கட்டமைப்புடன் கூடிய ஒசூர் கல்வி நிறுவனங்கள் வழித்தடம் உருவாக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.
- கிருஷ்ணகிரியின் சூளகிரி தாலுக்காவில் உள்ள சென்னப்பள்ளி கிராமத்தில் 27.36

ஏக்கர் நிலத்தை ஒசூர் வர்த்தக மையத் திட்டத்திற்காக TIDCO அடையாளம் கண்டு உள்ளது.

- டாடா எலக்ட்ரானிக்ஸ் பிரைவேட் லிமிடெட் (TEPL) நிறுவனம் 450 கோடி ரூபாய் செலவில் ஒரு மலிவு விலையிலான தொழில்துறை வீட்டு வசதித் திட்டத்தை உருவாக்கி வருகிறது.




# தேசியச் செய்திகள்

## UPI–UPU ஒருங்கிணைப்பு




- துபாயில் நடைபெற்ற 28வது அனைத்துலக அஞ்சல் மாநாட்டில் இந்தியா UPI–UPU ஒருங்கிணைப்பு திட்டத்தை வெளியிட்டது.
- UPI என்பது ஒருங்கிணைந்தப் பண வழங்கீட்டு இடைமுகத்தையும் UPU என்பது அனைத்துலக அஞ்சல் ஒன்றியத்தினையும் குறிக்கிறது.
- இந்த முன்னெடுப்பினை அஞ்சல் துறை, NPCI சர்வதேசப் பண வழங்கீட்டு இடைமுக லிமிடெட் மற்றும் UPU ஆகியவை உருவாக்கின.

- இது விரைவான பன்னாட்டு பணப் பரிமாற்றங்களுக்கான இந்தியாவின் UPI வசதியினை UPU இடையிணைப்பு தளத்துடன் இணைக்கிறது.
- இந்தத் திட்டத்தின் கீழ் டிஜிட்டல் கட்டணங்கள் மற்றும் பயிற்சியை ஆதரிக்க இந்தியா 10 மில்லியன் அமெரிக்க டாலர்களை வழங்க உறுதியளித்துள்ளது.
- வளைகுடா மற்றும் பாரிசில் உள்ள ஈபிள் கோபுரம் உட்பட பல உலகளாவிய இடங்களில் UPI தற்போது ஏற்றுக் கொள்ளப் படுகிறது.
- UPI–UPU ஒருங்கிணைப்பு 2030 ஆம் ஆண்டிற்குள் உலகளாவியப் பணம் அனுப்பும் செலவுகளை 3 சதவீதத்திற்கும் குறைவாகக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டு உள்ளது.

## இந்திய சுகாதார கூட்டமைப்பு

- புது டெல்லியில் இந்தியச் சுகாதார கூட்டமைப்பு (IHL) ஆனது, இந்திய கிரிக்கெட் வீரர் சேதேஷ்வர் புஜாராவால் தொடங்கி வைக்கப்பட்டது.
- நாடு முழுவதும் புற்றுநோய் விழிப்புணர்வை ஊக்குவிப்பதே இந்தக் கூட்டமைப்பின் முதன்மை குறிக்கோளாக இருந்தது.
- சுகாதார நிபுணர்களின் மன நலனை ஆதரிப்பதே இரண்டாம் நிலை நோக்கமாக இருந்தது.




## குடியேற்றம் மற்றும் வெளிநாட்டினர் (விலக்கு) ஆணை, 2025

- குடியேற்றம் மற்றும் வெளிநாட்டினர் (விலக்கு) ஆணை, 2025 என்பதின் உருவாக்கம் மத்திய உள்துறை அமைச்சகத்தால் அறிவிக்கப்பட்டது.
- இது குடியேற்றம் மற்றும் வெளிநாட்டினர் சட்டம், 2025 என்ற சட்டத்தின் கீழ் வெளியிடப் பட்டது
- இந்த அறிவிப்பு வெளிநாட்டினரின் பதிவு (விலக்கு) ஆணை, 1957 மற்றும் குடியேற்றம் (கொண்டு வருபவர்களின் பொறுப்பு) ஆணை, 2007 ஆகியவற்றை மாற்றுகிறது.
- இது இந்தியாவின் குடியேற்றக் கட்டமைப்பு தொடர்பான சில விஷயங்களில் அதிகத் தெளிவை வழங்குகிறது.
- இது செல்லுபடியாகும் பாஸ்போர்ட் அல்லது பிற செல்லுபடியாகும் பயண ஆவணம் மற்றும் நாட்டிற்குள் நுழைய, தங்க மற்றும் வெளியேற செல்லுபடியாகும் விசா தேவையிலிருந்து ஒரு சிலருக்கு விலக்கு அளிக்கிறது.

- இது நேபாளம் மற்றும் பூட்டான் நாட்டினர்; திபெத்திய அகதிகள்; ஆப்கானிஸ்தான், வங்கதேசம் மற்றும் பாகிஸ்தானைச் சேர்ந்த ஆறு மதச் சிறுபான்மையினர் மற்றும் இலங்கைத் தமிழர்களை உள்ளடக்கியது.
- நேபாளம் மற்றும் பூட்டான் குடிமக்கள் தங்கள் எல்லைகளைத் தாண்டி நிலம் அல்லது வான்வழியாக நுழையும்போது பாஸ்போர்ட் மற்றும் விசா தேவைகளிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறார்கள்.




- கடற்படை, ராணுவம் மற்றும் விமானப்படை வீரர்கள், அரசுப் போக்குவரத்தின் வாயிலாக தங்கள் குடும்பத்தினருடன் இந்தியாவிற்குள் நுழையும் அல்லது வெளியேறும் போது அந்த நபர்களுக்கு விலக்கு அளிக்கப் படுகிறது.
- இந்திய அதிகாரிகளிடம் பதிவு செய்யப்பட்ட மற்றும் செல்லுபடியாகும் சான்றிதழ்களை வைத்திருக்கும் திபெத்தியர்களுக்கும் இதில் அனுமதி உண்டு.
- மத துன்புறுத்தல் (அல்லது பயம் காரணமாக) டிசம்பர் 31, 2024 அன்று அல்லது அதற்கு முன்பு இந்தியாவிற்குள் நுழைந்த இந்துக்கள், சீக்கியர்கள், புத்த மதத்தினர், சமணர்கள், பார்சிகள் மற்றும் கிறிஸ்தவர்கள் ஆகியோருக்குச் செல்லுபடியாகும் ஆவணங்கள் இல்லாவிட்டாலும் அல்லது அவர்களின் பாஸ்போர்ட்/விசாக்கள் காலாவதியானாலும் கூட இதிலிருந்து அவர்கள் விலக்கு அளிக்கப் படுகிறார்கள்.
- விசாக்கள் அல்லது வெளிநாட்டு இந்திய குடிமக்கள் (OCI) பதிவுக்கு விண்ணப்பிக்கும் அனைத்து வெளிநாட்டினரும் பயோமெட்ரிக் தரவைச் சமர்ப்பிக்க வேண்டும்.
- இந்தியாவிற்குள் கைது செய்யப்படும் சட்டவிரோத குடியேறிகள் நாடு கடத்தப்படுவதற்கு காத்திருக்கும் இடங்களில் அல்லது தடுப்பு முகாம்களில் அடைத்து வைக்கப்படுவார்கள்.
- அரசாங்கத்தின் முன் ஒப்புதல் மற்றும் தொடர்பு மேற்பார்வை இல்லாமல் வெளிநாட்டினர் சிகரங்களில் ஏறக் கூடாது.
- பாதுகாக்கப்பட்ட அல்லது தடை செய்யப்பட்ட பகுதிகளுக்குள் நுழைவதற்கு அனுமதி தேவை என்பதோடு ஆப்கானிஸ்தான், சீனா மற்றும் பாகிஸ்தான் நாட்டினர் இதில் வெளிப்படையாகவே தடை செய்யப்பட்டுள்ளனர்.
- இதில் இலங்கை தமிழ் அகதிகள் பற்றிய குறிப்பு ஒரு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.
- இந்த உத்தரவு அவர்களை இலங்கைக்கு வலுக்கட்டாயமாகத் திருப்பி அனுப்புவதிலிருந்து பாதுகாக்கிறது.
- ஜனவரி 9, 2015 வரை இந்தியாவில் தங்குமிடம் தேடி பதிவு செய்யப்பட்ட இலங்கைத் தமிழர்கள், தங்குதல் மற்றும் வெளியேறுதல் போன்ற நோக்கங்களுக்காக இச்சட்டத்தின் கீழ் உள்ள கட்டுப்பாடுகளிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறார்கள்.

- ஆவணமற்ற இலங்கைத் தமிழ் அகதிகள் மத்திய உள்துறை அமைச்சகத்தின் (MHA) உத்தரவின் படி தண்டனை விதிகளிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டனர்.
- எனவே, ஜனவரி 9, 2015க்கு முன்பு இந்தியாவிற்குள் நுழைந்த பதிவு செய்யப்பட்ட இலங்கைத் தமிழ் நாட்டினரைக் குறிக்கும் "சட்டவிரோதக் குடியேறி" என்ற குறிச்சொல்லை இந்த உத்தரவு நீக்குகிறது.
- ஆனால் அவர்கள் நீண்ட கால விசாக்களுக்கு (LTV) விண்ணப்பிக்கத் தகுதியற்றவர்கள்.
- எனவே இது அவர்களுக்கு இந்தியக் குடியுரிமை வழங்குவதில் உடனடியாக உதவாது.
- இலங்கைத் தமிழர்களின் நடமாட்டத்தைப் பாதிக்கும் முக்கியப் பிரச்சினைகளில் ஒன்று, அவர்கள் 1967 பாஸ்போர்ட் சட்டம் மற்றும் 1946 வெளிநாட்டினர் சட்டம் (இரண்டு சட்டங்களும் 2025 சட்டத்தால் மாற்றப்பட்டு விட்டன) ஆகியவற்றை மீறுவதாகக் கூறப்பட்டது.
- குடியுரிமைக்கு முன்னோடியான LTVகள் ஒன்று முதல் ஐந்து ஆண்டுகள் வரை வழங்கப்படுகின்றன.
- ஆனால் வெளிநாட்டினர் 1955 ஆம் ஆண்டு குடியுரிமைச் சட்டத்தின் கீழ் இந்தியக் குடியுரிமைக்கு விண்ணப்பிக்கலாம்.
- இலங்கைக் குடிமகன் உட்பட எந்தவொரு வெளிநாட்டவரும், 1955 குடியுரிமைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதி அளவுகோல்களைப் பூர்த்தி செய்த பிறகு பதிவு அல்லது இயற்கைமயமாக்கல் மூலம் இந்தியக் குடியுரிமையைப் பெறலாம்.
- ஜூலை 1983 அல்லது அதற்குப் பிறகு இந்தியாவுக்கு வந்த எந்த இலங்கை அகதிகளும் குடியுரிமைச் சட்டம், 1955 என்பதின் விதிகளின் கீழ் இயற்கைமயமாக்கப்படவோ / பதிவு செய்யப்படவோ கூடாது.
- மூன்று முஸ்லிம் பெரும்பான்மை நாடுகளைச் சேர்ந்த ஆறு முஸ்லிம் அல்லாத குழுக்களுக்கு குடியுரிமை வழங்குவதற்காக மத்திய அரசு ஆறு ஆண்டுகளுக்கு முன்பு குடியுரிமைச் சட்டத்தைத் திருத்திய போது அதில் இலங்கைத் தமிழர்களும் சேர்க்கப்படவில்லை.
- இந்த செப்டம்பர் 2 அறிவிப்பில், ஆப்கானிஸ்தான், வங்கதேசம் மற்றும் பாகிஸ்தானைச் சேர்ந்த ஆறு சிறுபான்மைச் சமூகங்களைச் சேர்ந்த ஆவணமற்ற உறுப்பினர்கள், டிசம்பர் 31, 2024க்கு முன்னர் பாஸ்போர்ட் அல்லது விசாக்கள் எதுவும் இல்லாமல் அல்லது காலாவதியான பயண ஆவணங்களுடன் இந்தியாவிற்குள் நுழைந்தால், தண்டனை விதிகள் மற்றும் நாடு கடத்தலில் இருந்து அவர்களுக்கும் விலக்கு அளிக்கப்பட்டது.
- இந்த ஆறு சமூகங்களும் LTVகளுக்கு விண்ணப்பிக்க முடியும் இதனால் அவர்கள் இந்தியாவில் குறைந்தது 11 ஆண்டுகள் தொடர்ந்து தங்கிய பிறகு குடியுரிமைக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களாகிறார்கள் ஆனால் இதில் இலங்கைத் தமிழர்கள் அதற்கு தகுதியுடையவர்கள் அல்ல.
- இந்தியக் குடியுரிமையைப் பெறுவதற்காக இந்தியாவில் நிரந்தரக் குடியேற்றம் கோரி செல்லுபடியாகும் பயண ஆவணங்களோடு இந்தியாவிற்குள் நுழையும் பாகிஸ்தான், வங்கதேசம் மற்றும் ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த இந்துக்கள், சீக்கியர்கள், பௌத்தர்கள், சமணர்கள், பார்சிகள் மற்றும் கிறிஸ்தவர்கள் என ஆறு சிறுபான்மை சமூகங்களைச் சேர்ந்த உறுப்பினர்களும் இந்த LTVகளுக்குத் தகுதியுடையவர்கள் ஆவர்.
- இந்த ஆணையில் உள்ள மற்ற மூன்று தகுதியான நபர்கள்
    - இந்தியர்களை மணந்த பாகிஸ்தான் மற்றும் வங்கதேசப் பெண்கள்;
    - இந்தியாவில் இந்தியர்களை மணந்து இந்தியாவில் தங்கியிருக்கும் ஆப்கானிஸ்தான் நாட்டினர்;

- விதவை/விவாகரத்து காரணமாக இந்தியாவுக்குத் திரும்ப விரும்பும் பாகிஸ்தான்/வங்கதேசம்/ஆப்கானிஸ்தான் நாட்டுக் குடியுரிமையை வைத்திருக்கும் இந்திய வம்சாவளிப் பெண்கள், அவர்களை ஆதரிக்க ஆண் உறுப்பினர்கள் எவரும் இல்லாதவர்கள்; மற்றும் தீவிர கருணை தேவைப்படும் நபர்கள் ஆகியோர் ஆவர்.

# சர்வதேசச் செய்திகள்

## இந்தியா மற்றும் இஸ்ரேலின் BIA





- இந்திய மற்றும் இஸ்ரேல் அரசுகளானது புது டெல்லியில் இருதரப்பு முதலீட்டு ஒப்பந்தத்தில் (BIA) கையெழுத்திட்டன.
- முதலீட்டாளர்களுக்கு அதிக உறுதிப்பாடு மற்றும் பாதுகாப்பை வழங்குவதையும், குறைந்தபட்ச தரமான நடவடிக்கைகளுடன் கூடிய வர்த்தகம் மற்றும் பரஸ்பர முதலீடுகளை எளிதாக்குவதையும் BIA நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது நடுவர் மன்றம், பறிமுதல் செய்வதற்கு எதிரான பாதுகாப்புகள் மற்றும் வெளிப்படைத் தன்மை, சுமூகமானப் பரிமாற்றங்கள் மற்றும் இழப்புகளுக்கான இழப்பீடு ஆகியவற்றிற்கான விதிமுறைகள் மூலம் ஒரு சுயாதீனமான தகராறு தீர்க்கும் நெறிமுறையை உள்ளடக்கியது.
- இந்த ஒப்பந்தமானது தற்போது மொத்தம் 800 மில்லியன் அமெரிக்க டாலர்களாக உள்ள இருதரப்பு முதலீடுகளை அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப் படுவதோடு, இரு நாடுகளிலும் வணிகங்கள் மற்றும் பொருளாதாரங்களுக்குப் பயனளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# பொருளாதாரச் செய்திகள்

## வேளாண் துறையின் பங்களிப்பு

- இந்தியாவின் பொருளாதார உற்பத்தியில் வேளாண்மை 15 முதல் 20 சதவீதம் வரை பங்களிக்கிறது.

- இது இந்தியாவின் சுமார் 60 சதவீதப் பணியாளர்களை ஆதரிக்கிறது மற்றும் மில்லியன் கணக்கான வாழ்வாதாரங்களை நிலைநிறுத்துகிறது.
- புது டெல்லியில் நடைபெற்ற 'Dialogue NEXT' நிகழ்வின் போது இந்த தகவல்கள் பகிர்ந்து கொள்ளப் பட்டன.
- இந்த நிகழ்வை இந்திய வேளாண் ஆராய்ச்சி சபை (ICAR) ஏற்பாடு செய்தது.
- இந்த நிகழ்வானது சர்வதேச மக்காச்சோளம் மற்றும் கோதுமை மேம்பாட்டு மையம் (CIMMYT) மற்றும் தெற்காசியாவிற்கான போர்லாக் நிறுவனம் (BISA) ஆகியவற்றுடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டது.
- நடைமுறை சார்ந்த வேளாண் தீர்வுகளை ஊக்குவிப்பதற்காக "Take it to the Farmer" என்ற கருத்துருவின் கீழ் இந்த நிகழ்வு நடைபெற்றது.
- 'Dialogue NEXT' நிகழ்வு உலகளாவிய வேளாண் தலைவர்கள், கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் அறிவியலாளர்களை ஒன்றிணைத்தது.




# சுற்றுச்சூழல் செய்திகள்

## அயல் ஊடுருவல் இனம் - இராட்சத ஆப்பிரிக்க நத்தை

- சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ளப் பகுதிகளில் இராட்சத ஆப்பிரிக்க நத்தை (லிசாசடினா ஃபுலிகா) கண்டறியப்பட்டுள்ளது.
- இந்த இனமானது உலகின் மிக மோசமான ஆக்கிரமிப்பு இனங்களில் ஒன்றாகவும், தீங்கு விளைவிக்கும் ஒட்டுண்ணிகளின் அறியப்பட்ட ஓம்புயிரியாகவும் கருதப் படுகிறது.
- கள ஆய்வுகள் பரங்கிமலை/செயிண்ட் தாமஸ் மவுண்ட், திரிசூலம் மற்றும் பெருங்களத்தூர் மலைகளில் அது காணப்படுவதாக உறுதிப்படுத்தின.
- ஆஞ்சியோஸ்ட்ராங்கைலஸ் கான்டோனென்சிஸ் மற்றும் A. கோஸ்டாரிசென்சிஸ் போன்ற ஒட்டுண்ணி நூற்புழுக்களுக்கு இந்த நத்தை ஓர் ஓம்புயிரியாக/காரணியாக செயல்படுகிறது.
- இந்த ஒட்டுண்ணிகள் மனிதர்களில் ஈசினோபிலிக் மெனிங்கோஎன்செபாலிடிஸ் மற்றும் வயிற்று ஆஞ்சியோஸ்ட்ராங்கைலியாசிஸ் பாதிப்பினை ஏற்படுத்தும்.
- பாதிக்கப்பட்ட நத்தைகள் அல்லது நத்தை எச்சங்கள் ஊடுருவுவதன் மூலம் மனித தொற்று ஏற்படலாம்.
- இந்த நத்தை பல்வேறு வாழ்விடங்களில் உயிர்வாழும் திறன் கொண்டது மற்றும் 500க்கும் மேற்பட்ட தாவர இனங்களை உட்கொள்கிறது.

- ஒரு தீவிர விவசாயத் தாக்குதல் இனம் ஆன இது 100 மோசமான அயல் ஊடுருவல் இனங்களின் பட்டியலில் தொடர்ந்து இடம்பெறுகிறது.
- 1847 ஆம் ஆண்டு கொல்கத்தா தோட்டத்தில் ஓர் இணை நத்தை விடுவிக்கப்பட்ட போது இந்த இனம் முதன்முதலில் இந்தியாவில் அறிமுகப்படுத்தப் பட்டது.
- இந்த நத்தைகள் கிழக்கு ஆப்பிரிக்காவில் தோன்றி வணிகக் கப்பல்கள் வழியாக இந்தியாவிற்குப் பரவின.
- 1984 ஆம் ஆண்டில், சென்னை, சிதம்பரம், கோயம்புத்தூர் மற்றும் செங்கல்பட்டு உள்ளிட்ட பல மாவட்டங்களில் அவற்றின் இருப்பு பதிவு செய்யப் பட்டது.




# மாநிலச் செய்திகள்

## முழு எழுத்தறிவு பெற்ற மாநிலம் - இமாச்சலப் பிரதேசம்

- 99.30 சதவீத எழுத்தறிவு விகிதத்துடன் இமாச்சலப் பிரதேசம் 4வது முழு எழுத்தறிவு பெற்ற மாநிலமாக அறிவிக்கப்பட்டுள்ளது.
- ULLAS – நவ பாரத சக்சார்த்த காரியக்ரம் திட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட தேசிய எழுத்தறிவு அளவுருவான 95 சதவீதத்தை இந்த மாநிலம் தாண்டியுள்ளது.
- மாணவர்-ஆசிரியர் விகிதத்தில் இமாச்சலப் பிரதேசம் தற்போது நாட்டிலேயே முதலிடத்தில் உள்ளது என்பதோடு மேலும் இடைநிற்றல் விகிதம் சுழியாக உள்ளது.
- சுதந்திரத்தின் போது 7 சதவீத எழுத்தறிவு என்ற நிலையில் தொடங்கி 99.30 சதவீதத்தை இது முன்கூட்டியே எட்டியது.
- 2024 ஆம் ஆண்டு ஜூன் 24 ஆம் தேதியன்று, லடாக் முழு எழுத்தறிவு பெற்ற முதல் ஒன்றியப் பிரதேசமாக அறிவிக்கப்பட்டது.
- மற்ற மூன்று மாநிலங்கள் திரிபுரா, மிசோரம் மற்றும் கோவா.
- மே 20, 2025 அன்று, மிசோரம் இந்தியாவின் முதல் முழு எழுத்தறிவு பெற்ற மாநிலமாக

மாறியது.




# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## மஞ்சப்பை விருதுகள் 2025




- ஒருமுறை மட்டுமே பயன்படுத்தக்கூடிய நெகிழிப் பயன்பாடு இல்லாத வளாகங்களை உருவாக்குதல் மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த மாற்று அமைப்புகளை ஊக்குவித்தல் ஆகியவற்றிற்காக பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்கு மஞ்சப்பை விருதுகள் 2025 வழங்கப் பட்டன.
- தர்மபுரி மாவட்டம், பேலாரஹள்ளியில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளி, பள்ளிப் பிரிவில் முதல் பரிசாக 10 லட்சம் ரூபாய் வென்றது.
- அரியலூர் மாவட்டம், சிறுவளூரில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளி, பள்ளிப் பிரிவில் இரண்டாவது பரிசாக 5 லட்சம் ரூபாய் வென்றது.
- ஈரோடு மாவட்டம், பெருந்துறையில் உள்ள அரசு ஆடவர் மேல்நிலைப் பள்ளி, பள்ளிப் பிரிவில் மூன்றாவது பரிசாக 3 லட்சம் ரூபாய் வென்றது.

- திருச்சி ஜமால் முகமது கல்லூரி, கல்லூரிப் பிரிவில் முதல் பரிசாக 10 லட்சம் ரூபாய் வென்றது.
- ஈரோடு மாவட்டத்தின் T.N. பாளையம், JKK முனிராஜா தொழில்நுட்பக் கல்லூரி, கல்லூரிப் பிரிவில் இரண்டாவது பரிசாக 5 லட்சம் ரூபாய் வென்றது.
- கல்லூரிப் பிரிவில் திருச்சியில் உள்ள ஹோலி கிராஸ் கல்லூரி 3 லட்சம் ரூபாய்க்கான மூன்றாவது பரிசை வென்றது.
- இது தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் (TNPCB) மூலமான தமிழ்நாடு அரசின் முன் முயற்சி ஆகும்.

# முக்கிய தினங்கள்

## சர்வதேச எழுத்தறிவு தினம் 2025 - செப்டம்பர் 08




- இது கல்வியின் முக்கியத்துவம் மற்றும் எழுத்தறிவு எவ்வாறு மனித கண்ணியம் மற்றும் உரிமைகளின் அடிப்படை அம்சமாக உள்ளது என்பதைப் பற்றிய வருடாந்திர நினைவூட்டலாகும்.
- இது யுனெஸ்கோ அமைப்பினால் 1966 ஆம் ஆண்டு அக்டோபர் 26 ஆம் தேதியன்று நிறுவப்பட்டது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Promoting literacy in the digital era" என்பதாகும்.
- உலகளவில், 739 மில்லியன் இளையோர்கள் மற்றும் வயது வந்தவர்கள் அடிப்படை எழுத்தறிவுத் திறன்களைக் கொண்டிருக்கவில்லை.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★